இளந் தமிழ்த் தளிர்—1.

பாரதி கீதங்கள்.

OFFICE OF THE REG... MADRAS
22 JAN 1935
1780

பாரதி பிரசுராலயத்தாரால்
இளந் தமிழ்த் தளிர் பதிப்பாளர்
"மாசி"க்காக
(தபால் பெட்டி 14, கோலாலம்பூர், மலாயா)
வெளியிடப்பட்டது.

1935.

O-, IMSU
N35

1989

784.0954

59640

MADRAS

தமிழ் மொழி வாழ்த்து.

தான தனத்தன தான தனத்தன
தான தந்தானே.

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
யிசை கொண்டு வாழிய வே.

4. எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழிய வே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையக மே.

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே.

7. வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழிய வே.

குறிப்பு.

"இளந் தமிழ்த் தளிர்" வெளியீடுகளின் மூலமாக ஸ்ரீ 'மாசி' தமிழ் மக்கட்குச் செய்து வரும் தொண்டைக் குறித்து எவ்வளவு எழுதினாலும் மிகையாகாது. தமிழ் நாட்டின் தவப்பயனாகத் தோன்றிய ஸ்ரீ பாரதியாரிடத்தில் இவருக்குள்ள விசேஷ அன்பினால் ஸ்ரீ பாரதியாரின் செய்யுட்களில் சுவை மிகுந்த சிலவற்றைச் சேர்த்து ஒரு "தளிர்" தயாரிக்கவேணுமென்ற கோரிக்கைக் கிணங்கி, இச்சிறு புத்தகத்தை விசேஷ வெளியீடாகப் பதிப்பித்திருக்கிறோம்.

தமிழ் மொழிக்கும், முக்கியமாகப் பாரதியாருக்கும், மலாய் நாட்டில் இணையற்ற தொண்டு செய்து வரும் ஸ்ரீ "மாசி"க்குத் தமிழன்பர்கள் தக்க உதவி புரியும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

சென்னை,
1—1—1935. } பாரதி பிரசுராலயத்தார்.



ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி.

22 JAN 1935
MADRAS

பதிப்புரை.

தமிழ்ப் பெரும் நூல்களை திரட்டியும் சுருக்கியும் தருவது இளந் தமிழ்த் தனிரின் நோக்கங்களில் ஒன்று. இத்தகைய தனிரை வெளியிடுவதற்கான எண்ணத்தை முதன் முதல் எம் மனதிற் புகுத்தியவர் மஹாகவி சுப்பிரமண்ய பாரதியாரவர்களே. ஆதலால் அவரது நூல்களில் சில பாகத்தைத் திரட்டி இச் சிறு நூலில் அடக்கி வெளியிட வேண்டுமென்ற விருப்பம் எமக்கு நெடுநாளாக இருந்து வந்தது. இது விஷயமாக பாரதி 'பிரசுராலயத்தா'ருடன் கடிதப்போக்குவரவு நடந்து, கடைசியாக பாரதியாரின் சகோதரர் ஸ்ரீமான் சி. விஸ்வநாதன், பீ.ஏ., எல்.டி., அவர்களின் தயவால் இந்நூல் வெளியிடும் பாக்கியம் கிடைத்தது.

கவி யரசான பாரதியாரின் தேசியப் பற்று, தாய் மொழிப் பற்று, சமயப் பற்று, அன்பு, சகோதரத்வம், ஒற்றுமை முதலிய உணர்வு நிறைந்த காவியங்களையும் வசனங்களையும் வாங்கி வாசிப்பதற்கு இக் குறுஞ் சுவடி ஓர் தூண்டு

கோலாகு மென நம்பியே இதை வெளியிடுகிறேன். இந்நூலின் கடைசிப் பக்கங்களில் பாரதி நூல்கள் விபரமாக விளம்பரம் செய்யப் பட்டிருக்கின்றன. இளந் தமிழ்த் தளிர் ஐந்தாம் வெளியீடாக இச் சிறு நூலை அச்சிட்டு உதவிய பாரதி பிரசுராலயத்தாருக்கும்—சிறப்பாக ஸ்ரீமான் சி. விஸ்வநாதன் அவர்கட்கும்—இந்நூலுக்கு முகவுரை எழுதி உதவிய ஸ்ரீல ஸ்ரீ அரவிந்த ஆச்சிரமத்தில் அருந்தவம் புரியும் சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்கட்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

இங்ஙனம்,
"மாசி",
பதிப்பாளர்,
இளந் தமிழ்த் தளிர்.

கோலாலம்பூர்
1—1—1935.

ஓம் சுத்த சக்தி.

கவிக்குயில் வரலாறு.

[சுவாமி சுத்தானந்த பாரதியார்.]

கவிக்குயில் வாழ்த்து.

உன்னை நினைக் கையிலே—எங்கள்
உள்ளத்திலே வீர வெள்ளம் பெருகுது
வன்னக் கவிக் குயிலே—முகம்
வாடித் தவிக்குந் தமிழுக்கு வான்மழை
என்ன இரங்கி வந்தாய்—இருள்
இன்னல் பிளந்தினி அச்ச மில்லையென்றெம்
அன்னை விடுதலைக்கே—பொங்கும்
ஆவேச மின்னெனத் தாவிவந் தாய்—வாழ்க!

கண்க ளிரண்டெனவே—வீரக்
காளைக ளோடிளங் காதல் மயிலெனப்
பெண்கள் தலைநிமிர—ஜய
பேரிகை கொட்டியிவ் வூரை யெழுப்பினை

புண்களை மாற்றிவிட்டாய்—பசுங்
பொன்னு மணியுங் கனலும், பொலிதமிழ்ப்
பண்கள் பொழிந்ததெல்லாந்—தாய்ப்
பாலென நாடியிற் பாய்ந்து கலந்தன-உன்னை
வெற்றி முரசடிப்போம்—ஜய
வீர சுதந்திரத் தாயின் மணிக்கொடி
சுற்றி நடமிடுவோம்—நம்மைத்
துண்டு செய் மாயத் துயர்களை யின்றுடன்
எற்றி யெறிந்திடுவோம்—மாந்தர்
எல்லாரும் ஓர்குல மென்று சமதர்மம்
பற்றிமுன் னேறிடுவோம்—சக்தி
பாரதிக் தீங்கவி யாரமணிதுவோம்(உன்னை)

பழந்தமிழ் மந்திரங்கள் வெகு தொலையில் ஒலித்தன :—" நாமார்க்கும் குடியல்லோம் ! நமனை யஞ்சோம் ! அஞ்சுவது யாதொன்று மில்லை !" *செவியேறவில்லை ; தமிழகம்* இன்னும் *உறங்கியது. ஆண்டாள் திருப்பாவையும் மாணிக் கப்பள்ளி யெழுச்சியும் முழங்கின ;* இன்னும் *இருட்போர்வை போர்த்தபடியே யிருந்தது. அடிமை மோகம் அறிவை அயர்த்தியது. பாழ்*

பட்ட பழங்கோட்டையில் தமிழர் உறங்குகின்றனர். அச்சம், அடிமை, மடமைப் படைகள் கோட்டையைச் சுற்றிக் குமுறுகின்றன. விழித்து நிற்கும் வீரனைக் காணோம்! கன்னத்தில் கைவைத்து "இப்படி உண்டா!" என்று நெடுநேரம் கலங்கி நின்றாள் புது யுகத்தேவி. "ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்!" என்றொரு மந்திரநாதம் கேட்டது. உள்ளஞ் சிலிர்த்து நோக்கினாள். ஒரு கவிக்குயில் எதிர் நின்றது. "வா, என் மகனே!" என்று அவனைத் தன் ஜய பேரிகை யாக்கினாள்! கவி பேரிகை முழங்குகிறது: "ஈன்றவளே பள்ளி எழுந்தருளாயே" என்று; பொழுது புலர்ந்தது; பொய் யிருளகன்றது; சுருதிகள் முழங்கின; தமிழகம் எழுந்தது; தமிழர் விழித்தனர்! "பூமியிலெவர்க்குமினி யடிமையல்லோம்—பரிபூரணனுக்கே யடிமை செய்து வாழ்வோம்" பட்! அடிமைச் சங்கிலி அறுகின்றது!

"அச்சமில்லை! அச்சமில்லை!
அச்சமென்பதில்லையே!"

படக்! சங்கலி அறுந்தது! தமிழர் கைவீசி நடந்தனர்.

"எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் ஓரினம்
எல்லோரும் இந்தியாமக்கள்—
எல்லோருமோர்நிறை எல்லோரு மோர் விலை
எல்லோரு மிந்நாட்டு மன்னர்!"

வேற்றுமைப் பேய்கள் நடுநடுங்கின.

"ஒன்றுபட் டாலுண்டு வாழ்வே!"

உணர்ச்சி வந்தது!

"காக்கை குருவியெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களி யாட்டம்!"

சாதிச்செருக்குகள் தலைகவிழ்ந்தோடின! உள்ளத்தில் ஒரு அன்புக்கனலெழுந்தது. அக்கனலில்

"விடுதலை! விடுதலை! விடுதலை!"

என்ற நெய் வழங்கப்பெற்றது! சுதந்திர வேள்வி தொடங்கியது! தீ யேறுது! முப்பத்துமுக்கோடி பாரத தேவர்களும், பாரத சக்திகளும் சுதந்திர தாகத்துடன் அவியுண்ணக் காத்திருக்கின்றனர்.

இவ்வேள்விக் கனலைத் தமிழகக் குண்டத்தில் மூட்டியதே ஸ்ரீ சுப்ரஹ்மண்ய பாரதியார் பெருமை. "அச்சமில்லை! விடுதலை! எல்லோரும் ஓர் நிகர்! வீர சுதந்திரம்! ஜயமுண்டு, பயமில்லை, வந்தேமாதரம்! ஓம்சக்தி!" இவையே நமது கவிக்குயில் இசைத்த வேள்வி மந்திரங்கள்! பாரதியார் சிரஞ்சீவி; சாகாவரம் பெற்றவர். அந்த ஐம்பூதக்கூட்டில் துடித்த உயிரல்ல; அவ் வுயிருள் குலவியிருந்த வீரசுதந்திரக் தீயிலே பாரதியார். குரலே குயிலுரு; அன்பே பெண்ணுரு; வீரமே ஆணுரு; கம்பனும் ஹோமரும் கவி வடிவு; பாரதியாரும் பாவடிவு, அவ்வடிவு இதோ நம்முன், நம்முள், நமது நெஞ்சை யள்ளிக் கலந்த வீரக்காதலில்! வரம் பெற்ற கவிகள் மண்ணுடல் போயினும், இசை யுடல் பெற்று என்றும் வாழுவர். தமிழ்நாடே முன்னே லெமோரியா அடைந்த கதி பெற்றாலும், மந்திரக் கவிகளுக்குச் சாவில்லை.

இன்றும் திருநெல்வேலி செந்தமிழ்வேலி. அதில் எட்டையபுரம் ஒரு ஜமீன். சின்னஸாமி

ஐயருக்கு ஜமீன் சேவகம். ஐயர் கணக்கிலும் யந்திர நுட்பத்திலும் மிக்கவர் ; நமது மணியோ நேர் எதிரிடை. அவர் வீரக் காதலுக்கும் கவிதா தேவிக்கும் பிறந்ததாகவே நான் கருதுகிறேன். இயற்கவிகள் இருந்து படிக்கவேண்டியதில்லை ; காரிகைக்கு அவர்கள் கட்டடிமையில்லை ; காரிகை அவர்களைக் காதலுடன் எதிர்பார்த்து நிற்பாள். ஆற்றின் பாட்டிற்கும் காற்றின் பாட்டிற்கும் யாப்பிலக்கணம் எது? தடதடக்கும் இடிக்குச் சீரளி வரிசை யுண்டோ? இளங் குயிலை இசை நுணுக்கம் பிடித்துப் பார்ப்பரோ? ஆர்கவியும், தென்றலும், வெள்ளமும், புட்களும், இயல்பாக கட்டு மட்டுகளின்றி தமது உள்ளத்தை இசை யமுதாகப் பொழிவதுபோலவே இயற்கவிகளும் அருளார்வத்தால் இசையமுது பொழிவர். கவி பிறந்தவன்; இயற்கையின் மடியில் வளர்ந்தவன். உலகமெல்லாம் அவன் பள்ளிக்கூடம்.

நமது இயற் கவிக்கும் பள்ளிப்படிப்பு சள்ளையாயிருந்தது. கவி நினைப்பு ; கவி புனைப்பு ; குயில், காக்காய் பள்ளிக்கூடத்தில் கற்பதுண்டோ? “நலமோ ரேட்டுணை யுங்கண்டி

லேனிதை நாற்ப தாயிரங் கோயிலிற் சொல்லு வேன்" இதுவே திருநெல்வேலி பள்ளிக்கூடப் படிப்பிற்கு அவர் வைத்த முத்திரை. "வாராய் கவிதையாம் மணிப் பெயர்க் காதலி வந் தேனக் கருளுதல் வாழி நின் கடனே!" என்று கவிக்காதலேறித் திரிந்தார் நமது இயலி சைப் புலவர். "நமக்குத் தொழில் கவிதை" என்று வேறொன்றிலும் மனம் பற்றாதிருந்தார். பாட்டுக்கட்டுவார்; வெட்டு நடை கொட்டுவார்; பட்டுப்பட்டென நகைச்சுவை தெரிப்பார்; தமி ழையே குறிப்பார். இயற்காட்சிகளில் தனது காதலியைக் காண்பார் :—

ஆற்றங் கரை தனிலே—தனி
யானதோர் மண்டப மீதினிலே தென்றற்
காற்றை நுகர்ந் திருந்தேன்—அந்த
கன்னிக் கவிதை கொணர்ந்து தந்தாள் அதை
ஏற்று மன மகிழ்ந்தேன்—"அடி
என்னோடிணங்கி மணம் புரிவாய்" என்று
போற்றிய போதினிலே—இளம்
புன்னகை பூத்து மறைந்துவிட்டாளம்மா!"

ஆம், சில காலம் கவிதாதேவி மறைந்திருந்தாள். நமது கவிக் காதலருக்கு 15-ல் கலியாணம் நடந்தது. பிறகு தந்தை காலஞ் சென்றார். பாலபாரதி காசியில் தனது அத்தையின் ஆதரவில் வளர்ந்தார். அங்கு ஹிந்தியும் ஆரியமும் கற்றார். பிறகு ஜமீந்தார் அழைக்கவே பாரதியார் எட்டையபுரம் வந்தார். கவியரசன் புவியரசனுக்கு வணங்கான்; சுயக் கவிகளிடம் இச் சுதந்திரக் கனல் கொழுந்தேறும். இத்தகைய கவிகளைப் போற்ற தமிழ்ச் சங்கமும் இல்லை. 1904-ல் மதுரை சேதுபதிப்பள்ளிக்கூடத்தில் சிறிது காலம் தமிழ் சொல்லிக்கொடுத்தார். பாசவாழ்வு பன்றிக்கழகு. வீரவாழ்வே மனிதனுக்கழகு. கனியுண்கையில் கல் கடித்தது போல கவிதை யுண்கையில் இந்தக் கட்டுச் சேவகம் அவருக்குப் பிடிக்கவில்லை. தமிழன்னையின் மற்றொரு மாணிக்கமாகிய ஜீ. சுப்ரமண்ய ஐயர் தனது சஞ்சிகைச்சுடரான சுதேசமித்திரனுக்குத் துணை செய்ய பாரதியாரை அழைத்தார். அன்று முதல் பாரதியாரின் பொன்னெழுத்தாணி வீரக்கனலுமி துருக்கத்தொடங்கியது. கல்

லாகச் சபிக்கப்பெற்றவன் உயிர் பெற்றெழுந்த மாதிரி களித்தார்; நெடுநாட் சிறையுண்ட வீரன் விடுதலையானதும் ஒரு அறப்போர் எதிர்ந்தது போல் மகிழ்ந்தார். கவிக்காதலியுடன் தாய்த் தொண்டு புரிந்தார். திருமலாச்சாரியார் நடத்திய **"இந்தியா"** விற்கு ஆசிரியராகி தமிழ் நாட்டில் தாயன்பைப் பற்றவைத்தார். "இந்தியா" வே பாரதியாரின் உள்ளம். அன்னை யென்றால் அன்புக் கனலி பிறக்கும். அன்னை நாட்டில் ஆவேசங் கொள்ளாத கல்லும் உண்டோ? சக்தி யெழுப்பும் தந்தை நாடும், தேனென இனிக்கும் செந்தமிழ் நாடும், வானம் அளந்த தனைத்தும் அளந்திடும் வண்டமிழ் மொழியின் அமுதச் சுவையும் ஆர்வ முடன் கூறி,

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

என்று தமிழரை எழுப்பினர். "சிறந்து நின்ற சிந்தையோடு தேயம் நூறு வென்று அன்னை வெற்றி கொள்கவே!" என்று பாரததேவிக்கு

வாழ்த்தெடுத்தார். மனத்தில் உறுதியுடன் வாக்கில் இனிமையுடன் வீரசுதந்திர தேவியைத் தொழுது,

விண்ணி லிரவி தன்னை விற்றுவிட்டேவரும் [போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?

என்று உறங்கும் தமிழரை உறுத்தி எழுப்பினர்.

இந்நாட்களில், சிதம்பரம்பிள்ளை, திலகர், அரவிந்தர், பாலர், லஜபதி முதலிய வீரசிகாமணிகள் தாயின் தளையவிழ்க்கத் தாளா துழைத்தனர். அடக்கு முறைகளும் அடிக்கடி தடுக்கி நின்றன. 1908-ல் இந்தியாப் பத்திரிகை அச்சுச்சட்டத்தால் அடக்கப்பட்டது. பாரதியார் புதுவை புகுந்தார். புதுவையிலேதான் நமது புதுயுகப் பாவலர் தன்னைப் பிரியாத கவிக்காதலியுடன் விதவிதமான இன்பந் துய்த்தார். அக் காதலின்பத்தில் கொஞ்சிய ஒவ்வொரு முத்தமும் ஒரு முத்து மலர்க் கவிதையாகித் தமிழ்த்தென்றலுக்குப் புதுமண மேற்றியது.

வடக்கே வந்தே மாதரம்; தெற்கே 'இந்தியா.' வந்தே மாதரத்திற்கு ஒரு மந்திர சக்தியளித்து, பாரதத்தாயின் பொன்னுருவை இந்தியர் மனக் கோயிலில் நின்று நிலவச் செய்த பெருமை ஸ்ரீ அரவிந்தருக்கு உரியது. பின்னே நடந்த நாட்டியங்களெல்லாம் வந்தேமாதரத்தின் எதிரொலியேயாகும். திலகர், அரவிந்தரின் வீரநடைக்கேற்ப நமது கவிக்குயிலின் ஆவேசமும் பொங்கியது. நெஞ்சிலுரமற்ற "அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்" வைரவாளென அவர் பேனை அஞ்சி அப்புறஞ் செல்லும். தாயின் மணிக் கொடியை பாரதியார் தனது பேனாமுனையில் தாங்கினர். சொல்லுக்கு வெற்றியுண்டு; உரை உலகாளும்; கவி புவி வெல்லும். ஆம், வென்றது!

1909-ல் "இந்தியா" பிரிட்டிஷ் எல்லையில் வரக்கூடாதென்று தடை செய்யப்பட்டு பாரதியாரின் உள்ளத்திலேயே அடங்கிற்று. அதன்பின் ஸ்ரீ அரவிந்தர் நடத்திய அரிய ஞான-வீர வாரத்தாளான "கர்மயோகி" யைத் தமிழில் மொழி பெயர்த்துச் சில காலம் வெளியிட்டார்.

1910-ல் ஸ்ரீ அரவிந்தர் யோகசித்திக்காகப் புதுவை புகுந்தார். அரவிந்தர் உறவினால் பாரதியார் கவிதையில் ஒரு ஞான சக்திக்கனல் ஏறியது. சக்திப்பாட்டு, வேள்விப்பாட்டு, முருகன் பாட்டு, கண்ணன் பாட்டுகள் பேரின்பச் சுடர்மணிகளாக வெளி வந்தன.

"ஆடுபாம்பே-எழுந்-தாடு பாம்பே
அன்னைதுயில் நீங்கநலந் துன்னுபாம்பே !

உண்மை நிலை கண்டுறங்கும் யோகப்பாம்பே
உலகத்தைச் சமன்செய்ய எண்ணுபாம்பே
திண்மைநிலை கொண்டிருக்குந்
[தெரிவைப்பாம்பே
தெய்விகத்தைக் காட்டுதற்குத்
[தீவிரங்கொள்வாய் !

ஆதிசிவன் மேலிருக்கும் நாகப்
[பாம்பே— எங்கள்
அரவிந்தப் பேர்புனைந்த அன்புப்
பாம்பே !
ஜோதிப்படந் தூக்கிநட
[மாடிவருவாய்—அந்தச்
சோலைநிழ லாலேமது துன்ப
[மொழிவோம் !"

என்று அரவிந்தரைப் போற்றுகிறார். "இங்கே தேவர் சங்கங்கூடும், கிருதயுக மெய்தும், விண் மண் மிசை விளங்கும், புவிமீதினிலே புதுவாழ்வுறும், சக்தி விளங்கும்" என்னும் அரவிந்தக் காட்சிகள் பாரதியார் கவிதைகளில் மிளிர்கின்றன. மோகத்தைக் கொன்று, யோகத்தில் நின்று, பந்தனை நீங்கி, சிந்தனை தெளிந்து, உள்ளமுருகி, ஊனமொழிந்து, பராசக்தியின் கருணை வெள்ளத்தை அள்ளிப்பருக அவர் மனம் அனவரதமும் துடித்தது!

வறுமை, வறுமை, வறுமை! பாரதியாரின் தூல வாழ்விற்கு இவ்வாறு சாப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது—கவிக்காதலி ஒரு கன்னத்திற் கொஞ்சுவாள்; வறுமைப் பேய் மற்றொரு கன்னத்தைக் கிள்ளும்; உள்ளம் மட்டும் அன்னையிடம் ஈடுபட்டிருக்கும். இடிபோல் சிரிப்பார்; தீபோல் சினப்பார்; கார்போல் கவி மொழிவார்.

புதுவை புதிது. சுற்றும் கண்ணுறங்காக் காப்பு, காவல், குடும்பச் சுமை. பொது மக்களின்

ஆதரவு ஏறக்குறைய பூஜ்யம். அந்நாள் ராணா பிரதாப சிம்ஹன் பட்ட கஷ்டமெல்லாம் இந்த ஆதி வீரர்கள் பட்டனர். வறுமைச் சிலுவையிலிருந்து இவ்வீரர்கள் நாட்டிற்குழைத்தனர். புதுவையிற் புகுந்த தேசபக்தருக்கு விடுதலை கிடைத்தும், 1919ல், பாரதியார் குடும்பத்துடன் கடையம் வந்தார். இடையில் டாணாக்காரர் பிடித்து, பிறகு விடுதலை செய்தனர். 1920ல் மீண்டும் சுதேச மித்திரன் வேலை. சென்னையில் தன்னைப் படையெடுத்த வறுமையின் கொடுமையை 'ஞானரத'த்தில் சித்தரிக்கிறார். "சுப்ரமண்ய பாரதியார்" என்ற எமது நூலில் பாரதியாரைப் பற்றி விரிவாகக் காண்க. புதுவையை விட்டபின் சிறு சிறு கதைகளாலும், சிங்காரக் கட்டுரைகளாலும் பாரதியார் தமிழ்ப்பணி புரிந்தார். 11-9-1921ல் பாரதியார் படும் வறுமை நோயைச் சகிக்காது இந்தத் தமிழருக்கு உணர்வு வரவேண்டுமென்று கவிமகள் அவரை விண்ணுலகிற்கு அழைத்துச் சென்றாள். "ஆம் வீர மகனே, மாந்தருக்குப்பாடினை ; வா ; உன் தமிழைத்

தேவர் பருகட்டும் என்றே" கவித் தெய்வம் இவரை எடுத்தேகியது! இன்று பாரதியாரின் "தேசோபநிஷத்து" சக்தி பரப்புகிறது! "எல்லாரும் அமரநிலை எய்துநன் முறையை இந்தியா உலகிற் களிக்கும்" ஆ! இந்த தீர்க்க தரிசனம் நிறைவேறுகிறது, நிறைவேறும், நிறைவேறிற்று. இதுவே பாரதியார் பாடலின் முத்தாய்ப்பு! தமிழ் நாட்டில் பெரிய மஹாகவிகளும், வரகவிகளும் வருவார்களென்பது பாரதியாரின் உறுதி. ஆம், அது உறுதி. "முருகா, முருகா," "விண்ணும் மண்ணுந்தனியாளும்," "பாரத சமுதாயம்" இம்மூன்றும் பாரதியார் பாடல்களின் ஜீவ நாடிகள். இவை தமிழர் நரம்பில் சக்தி நாதம் புரிக!

சுத்தானந்த பாரதி.

ஓம் சக்தி.

தேசீய கீதங்கள்.

வந்தே மாதரம்.

---

*தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.

ராகம்—நாதநாமக் கிரியை. தாளம்—ஆதி.

பல்லவி.

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்.
(வந்தே)

சரணங்கள்.

1. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே.
(வந்தே)

2. ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ ?
சீனத்த ராய்விடு வாரோ ?—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப் பாரோ ?
(வந்தே)

3. ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி ?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ ?
(வந்தே)

4. ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேணடும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும் ?
(வந்தே)

5. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.
(வந்தே)

6. புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு

போயின நாட்களுக்கினி மனம் நாணித்

தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்

தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி

(வந்தே)

பாரத நாடு.

ராகம்—ஹிந்துஸ்தானி தோடி.

பல்லவி.

பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு.

சரணங்கள்.

1. ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

2. தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

3. நன்மையிலே உடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன்மயி லொத்திடு மாதர்தங் கற்பின்
புகழினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

4. ஆக்கத்திலே தொழி லூக்கத்திலே—புய
வீக்கத்திலே உயர் நோக்கத்திலே
காக்கத் திறல் கொண்ட மல்லர்தஞ் சேனைக்
கடலினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

5. வண்மையிலே உளத் திண்மையிலே—மனத்
தண்மையிலே மதி நுண்மையிலே
உண்மையிலே தவறாத புலவர்
உணர்வினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

6. யாகத்திலே தவ வேகத்திலே—தனி
யோகத்திலே பல போகத்திலே
ஆகத்திலே தெய்வ பக்தி கொண்டார் தம்
அருளினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

7. ஆற்றினிலே சுனை யூற்றினிலே—தென்றற்
காற்றினிலே மலைப் பேற்றினிலே
ஏற்றினிலே பய னீந்திடுங் காலி
யினத்தினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

8. தோட்டத்திலே மரக் கூட்டத்திலே—கனி
யீட்டத்திலே பயி ரூட்டத்திலே
தேட்டத்திலே அடங்காத நிதியின்
சிறப்பினிலே உயர் நாடு—இந்தப் (பாரு)

நாட்டு வணக்கம்.

சுதேச வந்தனம்.

ராகம்—காம்போதி. தாளம்—ஆதி.

1. எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவி
யிருந்தது மிந்நாடே—அதன்
முந்தைய ராயிர மாண்டுகள் வாழ்ந்து
முடிந்தது மிந்நாடே—அவர்
சிந்தையி லாயிர யெண்ணம் வளர்ந்து
சிறந்தது மிந்நாடே—இதை
வந்தனை கூறி மனதி லிருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ?

2. இன்னுயிர் தந்தெமை யீன்று வளர்த் தரு
ளீந்தது மிந்நாடே—எங்கள்
அன்னையர் தோன்றி மழலைகள்கூறி
அறிந்தது மிந்நாடே—அவர்
கன்னிய ராகி நிலவினி லாடிக்
களித்தது மிந்நாடே—தங்கள்
பொன்னுட லின்புற நீர்விளை யாடியில்
போந்தது மிந்நாடே—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனே ?

3. மங்கைய ராயவர் இல்லற நன்கு
வளர்த்தது மிந்நாடே—அவர்
தங்க மதலைக ளீன்றமு தூட்டித்
தழுவிய திந்நாடே—மக்கள்
துங்க முயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்தது மிந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடற் பூந்துகள்
ஆர்ந்தது மிந்நாடே—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனே ?

எங்கள் நாடு.

ராகம்—பூபாளம்.

1. மன்னு மிமய மலை யெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரேது வேறே?
பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூலிது போலே?
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவ மிஃதை யெமக்கிலை யீடே.

2. பாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு

பூரண ஞானம் பொலிந்த நன்னடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவ மிஃதை யெமக்கிலை யீடே.

3. இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழையராகி யினி மண்ணிற் றுஞ்சோம்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்
கன்னலுந் தேனும் கனியு மின்பாலும்
கதலியும் செந்நெலும் நல்கு மெக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவ மிஃதை யெமக்கிலை யீடே.

59640

எங்கள் தாய்.

காவடிச்சிந்தில் 'ஆறுமுகவடி வேலவனே' என்ற மெட்டு.

O-31MSU
N35

1. தோன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும்—இவள்
என்று பிறந்தவ ளென்றுண ராத
இயல்பின ளாமெங்கள் தாய்.

2. யாரும் வகுத்தற் கரிய பிராயத்த
ளாயினு மேயெங்கள் தாய்—இந்தப்
பாருளெந் நாளுமோர் கன்னிகை யென்னப்
பயின்றிடு வாளெங்கள் தாய்.

3. முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை யொன்றுடையாள்.

4. நாவினில் வேத முடையவள் கையில்
நலந்திகழ் வாளுடையாள்—தனை
மேவினர்க் கின்னருள் செய்பவள் தீயரை
வீட்டிடு தோளுடையாள்.

5. அறுபது கோடி தடக்கைக ளாலும்
அறங்கள் நடத்துவள் தாய்—தனைச்
செறுவது நாடி வருபவ ரைத்துகள்
செய்து கிடத்துவள் தாய்.

6. பூமியினும் பொறை மிக்குடை யாள்பெரும்
புண்ணிய நெஞ்சினள் தாய்—எனில்
தோமிழைப் பார்முன நின்றிடுங் காற்கொடுந்
துர்க்கை யனையவள் தாய்.

7. கற்றைச் சடைமதி வைத்த துறவியைக்
கைதொழு வாளெங்கள் தாய்—கையில்
ஒற்றைத் திகிரி கொண்டேமுல காளும்
ஒருவனை யுந்தொழு வாள்.

8. யோகத்தி லேநிக ரற்றவ ளுண்மையும்
ஒன்றென நன்றறிவாள்—உயர்

போகத்தி லேயு நிறைந்தவ ளெண்ணரும்
பொற்குவை தானுடையாள்.

9. நல்லற நாடிய மன்னரை வாழ்த்தி
நயம்புரி வாளெங்கள் தாய்—அவர்
அல்லவ ராயி னவரை விழுங்கிப்பின்
ஆனந்தக் கூத்திடு வாள்.

10. வெண்மை வளரிம யாசலன் றந்த
விறன் மக ளாமெங்கள் தாய்—அவன்
திண்மை மறையினுந் தான்மறை யாணித்தகுஞ்
சீருறு வாளெங்கள் தாய்.

மஹாத்மா காந்தி பஞ்சகம்.

1. வாழ்கநீ ! எம்மான், இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி,
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மஹாத்மா ! நீ வாழ்க ! வாழ்க !

2. அடிமை வாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்
குடிமையி லுயர்வு கல்வி
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்.

வேறு.

3. கொடியவெந் நாக பாசத்தை மாற்ற
மூலிகை கொணர்ந்தவ னென்கோ?
இடிமின்னல்காக்கும் குடைசெய்தா னென்கோ?
என் சொலிப் புகழ்வதி உனையே?
விடிவிலாத் துன்பஞ் செயும் பராதீன
வெம்பிணி யகற்றிடும் வண்ணம்
படிமிசைப் புதிதாச் சாலவு மெளிதாம்
படிக்கொரு சூழ்ச்சி நீ படைத்தாய்!

4. தன்னுயிர் போலே தனக்கழி வெண்ணும்
பிறனுயிர் தன்னையுங் கணித்தல்
மன்னுயி ரெல்லாங் கடவுளின் வடிவம்
கடவுளின் மக்களென் றுணர்தல்
இன்ன மெய்ஞ் ஞானத் துணிவினை மற்றுங்
கிழிபடு போர் கொலை தண்டம்
பின்னியே கிடக்கும் அரசிய லதனிற்
பிணைத்திடத் துணிந்தனை, பெருமான்!

5. பெருங்கொலை வழியாம் போர்வழி யிகழ்ந்தாய்
அதனினுந் திறன்பெரி துடைத்தாம்
அருங்கலை வாணர் மெய்த்தொண்டர் தங்கள்
அறவழி யென்று நீ யறிந்தாய் ;
நெருங்கிய பயன்சேர் " ஒத்துழையாமை "
நெறியினால் இந்தியா விற்கு
வருங்கதி கண்டு பகைத் தொழில் மறந்து
வையகம் வாழ்க நல் லறத்தே !

சுதந்திரப் பெருமை.

" தில்லைவெளியிலே கலந்துவிட்டாலவர்
திரும்பியும் வருவாரோ " என்ற மெட்டு.

1. வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ ? (வீர)

2. புகழுநல் லறமுமே யன்றியெல்லாம் வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறு மீனத்தொண் டியற்றியும் வாழ்வுதற்
கிச்சையுற் றிருப்பாரோ ? (வீர)

3. பிறந்தவர் யாவரு மிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர்கொண்டுவாழ்வது
சுகமென்று மதிப்பாரோ ? (வீர)

4. மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை யுணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினு முண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ ? (வீர)

5. விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும்
மின்மினி கொள்வாரோ ?— [போய்
கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ ? (வீர)

6. மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினுற்
கைகொட்டிச் சிரியாரோ ? (வீர)

7. வந்தே மாதர மென்று வணங்கிய பின்
மாயத்தை வணங்குவரோ ?
வந்தே மாதர மொன்றே தாரக
மென்பதை மறப்பாரோ ? (வீர)

——

சுதந்திர தேவியின் துதி.

விருத்தம்.

1. இதந்தரு மனையி னீங்கி
   இடர்மிகு சிறைப் பட்டாலும்
   பதந்திரு விரண்டு மாறிப்
   பழிமிகுத் திழிவுற் றாலும்
   விதந்தரு கோடி யின்னல்
   விளைந்தெனை யழித்திட்டாலும்
   சுதந்திர தேவி! நின்னைத்
   தொழுதிடல் மறக்கிலேனே.

2. நின்னருள் பெற்றி லாதார்
   நிகரிலாச் செல்வ ரேனும்
   பன்னருங் கல்வி கேள்வி
   படைத் துயர்ந் திட்டாரேனும்
   பின்னரும் எண்ணி லாத
   பெருமையிற் சிறந்தா ரேனும்

அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.

3. தேவி ! நின் ஒளி பெறாத
தேயமோர் தேய மாமோ ?
ஆவியங் குண்டோ ? செம்மை
அறிவுண்டோ ? ஆக்க முண்டோ ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள் வேதங்க ளுண்டோ ?
பாவிய ரன்றோ நின்றன்
பாலனம் படைத்தி லாதார் ?

4. ஒழிவறு நோயிற் சாவார்
ஊக்கமொன் றறிய மாட்டார்
கழிவறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையி னிற்பார்
இழிவுறு வாழ்க்கை தேரார்
கனவினு மின்பங் காணார்
அழிவறு பெருமை நல்கும்
அன்னை ! நின்னருள் பெறாதார்.

வேறு.

5. தேவி! நின்னருள் தேடி யுளந்தவித்
தாவியும் தம தன்பு மளிப்பவர்
மேவி நிற்பது வெஞ்சிறை யாயினுந்
தாவில் வானுல கென்னத் தகுவதே.

6. அம்மை யுன்ற னருமை யறிகிலார்
செம்மை யென்றிழி தொண்டினைச் சிந்திப்பார்
இம்மை யின்பங்க ளெய்துபொன் மாடத்தை
வெம்மை யார்புன் சிறையெனல் வேண்டுமே.

7. மேற்றி சைப்பல நாட்டினர் வீரத்தால்
போற்றி நின்னைப் புது நிலை யெய்தினர்;
கூற்றி னுக்குயிர் கோடி கொடுத்தும்நின்
பேற்றி னைப்பெறு வேமெனல் பேணினர்.

8. அன்ன தன்மைகொள் நின்னை யடியனேன்
என்ன கூறி யிசைத்திட வல்லனே?
பின்ன முற்றுப் பெருமை யிழந்து நின்
சின்ன மற்றழி தேயத்திற் றோன்றினேன்.

9. போ றத்தினைப் பேணுநல் வேலியே!
சோர வாழ்க்கை துயர்மிடி யாதிய
கார றுக்கக் கதித்திடு சோதியே!
வீர ருக்கமுதே! நினை வேண்டுவேன்.

ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்.

கவிகள்.

ராகம்—கமாஸ். தாளம்—ஆதி.

1. என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?
என்றெம தன்னை கை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?
அன்றொரு பாரத மாக்க வந்தோனே,
ஆரியர் வாழ்வினை யாதரிப் போனே!
வென்றி தருந்துணை நின்னரு ளன்றோ?
மெய்யடியோ மின்னும் வாடுதல் நன்றோ?

2. பஞ்சமு நோயுநின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்ச மடைந்தபின் கைவிட லாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள்செயுங் கடமை யில்லாயோ?
ஆரிய நீயுநின் அறமறந் தாயோ?
வெஞ்செய லரக்கரை வீட்டிடுவோனே,
வீர சிகாமணி, ஆரியர் கோனே!

விடுதலை.

(பிலஹரி)

விடுதலை ! விடுதலை ! விடுதலை !

1. பறையருக்கு மிங்கு தீயர்
   புலையருக்கும் விடுதலை !
   பரவரோடு குறவருக்கு
   மறவருக்கும் விடுதலை !
   திறமைகொண்ட தீமையற்ற
   தொழில் புரிந்து யாவரும்
   தேர்ந்தகல்வி ஞான மெய்தி
   வாழ்வ மிந்த நாட்டிலே. (விடுதலை)

2. ஏழையென்றும் அடிமையென்றும்
   எவனுமில்லை, ஜாதியில்
   இழிவுகொண்ட மனிதரென்ப
   திந்தியாவில் இல்லையே ;

வாழி கல்வி செல்வ மெய்தி
மன மகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொரு நிகர்
ஸமானமாக வாழ்வமே. (விடுதலை)

3. மாதர் தம்மை யிழிவுசெய்யு
மடமையைக்கொளுத்துவோம் ;
வையவாழ்வு தன்னிலெந்த
வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரி நிகர் ஸமானமாக வாழ்வ
மிந்த நாட்டிலே. (விடுதலை)

பாரத ஜனங்களின் தற்கால நிலைமை.

(நொண்டிச் சிந்து.)

1. நெஞ்சு பொறுக்குதில்லையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனைப் பேய்க ளென்பார்—இந்த
மரத்தி லென்பார், அந்தக் குளத்திலென்பார்;
துஞ்சுது முகட்டி லென்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார்.
(நெஞ்சு)

2. மந்திரவாதி யென்பார்—சொன்ன
மாத்திரத்திலே மனக் கிலிபிடிப்பார் ;
யந்திர சூனியங்கள்—இன்னும்
எத்தனை யாயிரம் இவர் துயர்கள் !
தந்த பொருளைக்கொண்டே—ஜனம்
தாங்குவ ருலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்ச மயர்வார்.
(நெஞ்சு)

3. சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டொருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பாலெவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டு பயந் தெழுந்து நிற்பார்
எப்போதும் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போ லேங்கி நடப்பார்.
(நெஞ்சு)

4. நெஞ்சு பொறுக்குதில்லையே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதில்லையே
கஞ்சி குடிப்பதற் கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரிதவித்தே உயிர் துடி துடித்து
துஞ்சி மடிகின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்க வோர் வழியில்லையே.
(நெஞ்சு)

5. எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள்போல்—பிறர்
காட்டிய வழியிற் சென்று மாட்டிக்கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலாயிரங் கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்.
(நெஞ்சு)

பெண்கள் விடுதலைக் கும்மி.

காப்பு..

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக்களிப்பொடு நாம் பாடக்
கண்களிலே யொளி போல வுயிரில்
கலந் தொளிர் தெய்வநற் காப்பாமே.

1. கும்மியடி தமிழ் நாடு முழுதுங்
குலுங்கிடக் கை கொட்டிக் கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி. (கும்மி)

2. ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார் [மென்ற
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

3. மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினி லெம்மிடங் காட்ட வந்தாரதை
வெட்டி விட்டோ மென்று கும்மியடி. (கும்மி)

4. நல்ல விலைகொண்டு நாயை விற்பாரந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ ?
கொல்லத் துணிவின்றி நம்மையு மந்நிலை
கூட்டி வைத்தார் பழி கூட்டி விட்டார். (கும்மி)

5. கற்பு நிலை யென்று சொல்ல வந்தா ரிரு
கக்ஷிக்கு மஃது பொதுவில் வைப்போம்
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி

6. பட்டங்க ளாள் வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினி லாணுக்கிங்கே பெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி. (கும்மி)

7. வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோ மென்று கும்மியடி
சாதம் படைக்கவுஞ் செய்திடு வோந் தெய்வச்
சாதி படைக்கவுஞ் செய்திடு வோம். (கும்மி)

8. காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி. (கும்மி)

தோத்திரப் பாடல்கள்

1. ஆறு துணை.

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்—பரா சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி—ஓம் சக்தி
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.

1. கணபதி ராயன்—அவ னிரு
காலைப் பிடித்திடுவோம்
குண முயர்ந் திடவே—விடுதலை
கூடி மகிழ்ந் திடவே.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

2. சொல்லுக் கடங்கா வே—பரா சக்தி
சூரத் தனங்க ளெல்லாம்
வல்லமை தந்திடு வாள்—பரா சக்தி
வாழி யென்றே துதிப்போம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

3. வெற்றி வடி வேலன்—அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ !—பகையே !
துள்ளி வருகுது வேல்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

4. தாமரைப் பூவினிலே—சுருதியைத்
தனி யிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே—கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய் திடு வோம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

5. பாம்புத் தலை மேலே—நடஞ் செயும்
பாதத்தினைப் புகழ் வோம்
மாம்பழ வாயினிலே—குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

6. செல்வத் திரு மகளைத்—திடங் கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வ மெல்லாந் தருவாள்—நம தொளி
திக் கனைத்தும் பரவும்.
(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)

---

2. ஸரஸ்வதி தேவியின் புகழ்.

ராகம்—ஆனந்த பைரவி. தாளம்—சாப்பு.

1. வெள்ளைத் தாமரைப் பூவி லிருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தி னுண்ணின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்.
(வெள்ளைத்)

2. மாதர் தீங்குரற் பாட்டிலிருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியினாவை யிருப்பிடங் கொண்டாள்

கோதகன்ற தொழி லுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடி வாகிடப் பெற்றாள்.
(வெள்ளைத்)

3. வஞ்சமற்ற தொழில் புரிந் துண்டு
வாழு மாந்தர் குல தெய்வ மாவாள்
வெஞ்சமர்க் குயி ராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற் பொருள் வாணிகஞ் செய்வோர்
வீர மன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்
(வெள்ளைத்)

4. தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
தீமைகாட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக்கு குயி ராகிய தெய்வம்

செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்.
(வெள்ளைத்)

5. செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர் !
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர் !
வந்தன மிவட் கேசெய்வ தென்றால்
வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசையாக அடுக்கி யதன் மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்திர மிவள் பூசனை யன்றாம்
(வெள்ளைக்)

6. வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்க ளெங்கும் பல பல பள்ளி

தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயினுக் கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.
(வெள்ளைத்)

7. 'ஊணர் தேசம், யவனர் தந் தேசம்
உதய ஞாயிற் றொளிபெறு நாடு,
சேணகன்ற தோர் சிற்றடிச் சீனம்
செல்வப் பார சிகப் பழந்தேசம்
தோணலத்த துருக்க மிசிரம்
சூழ் கடற் கப் புறத்தினி யின்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவி யொளிமிகுத் தோங்க.
(வெள்ளைத்)

8. ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
ஊன மின்று பெரிதிழைக் கின்றீர்;
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்;

மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போனதற்கு வருந்துதல் வேண்டா;
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்.
(வெள்ளைத்)

9. இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்.
(வெள்ளைத்)

10. நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்!
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!
(வெள்ளைத்)

3. முருகன் பாட்டு.

ராகம்—நாட்டைக்குறிஞ்சி. தாளம்—ஆதி.

பல்லவி.

முருகா—முருகா—முருகா.

சரணங்கள்.

1. வருவாய் மயில் மீ தினிலே
வடிவே லுடனே வருவாய்
தருவாய் நலமுந் தகவும் புகழுந்
தவமுந் திறமுந் தனமுங் கனமும். (முருகா)

2. அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய்
முடியா மறையின் முடிவே, அசுரர்
முடிவே கருதும் வடிவே லவனே ! (முருகா)

3. சுருதிப் பொருளே வருக
துணிவே கனலே வருக.
கருதிக் கருதிக் கவலைப் படுவார்
கவலைக் கடலைக் கடியும் வடிவேல் (முருகன்)

4. அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய்! சரணம், சரணம்!
குமரா பிணியா வையுமே சிதறக்
குமுறும் சுடர்வேலவனே சரணம்! (முருகா)

5. அறிவா கிய கோயிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய், அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய். (முருகா)

6. குருவே பரமன் மகனே
குகையில் வளருங் கனலே
தருவாய் தொழிலும் பயனும், அமரர்
ஸமரா திபனே, சரணம் சரணம்! (முருகா)

---

4. முருகன் பாட்டு.

1. வீரத் திருவிழிப் பார்வையும்—வெற்றி
வேலு மயிலுமென் முன்னின்றே—எந்த
நேரத் திலுமெனைக் காக்குமே—அன்னை
நீலி பராசக்தி தண்ணருட்—கரை
யோரத்திலே புணை கூடுதே—கந்தன்
ஊக்கத்தை யென்னுள நாடுதே—மலை
வாரத் திலே விளை யாடுவான்—என்றும்
வானவர் துன்பத்தைச் சாடுவான்.

2. வேடர் கனியை விரும்பியே—தவ
வேடம் புனைந்து திரிகுவான்—தமிழ்
நாடு பெரும்புகழ் சேரவே—முனி
நாதனுக் கிம்மொழி கூறுவான்—சுரர்
பாடு விடிந்தது மகிழ்ந்திட—இருட்
பார மலைகளைச் சீறுவான்—மறை
யேடு தரித்த முதல்வனும்—குரு
வென்றிட மெய்ப்புக ழேறுவான்.

3. தேவர் மகளை மணந்திடத்—தெற்குச்
தீவி லசுரனை மாய்த்திட்டான்—மக்கள்
யாவருக் குந்தலை யாயினன்—மறை
அர்த்த முணர்த்துநல் வாயினன்—தமிழ்ப்
பாவலர்க் கின்னருள் செய்குவான்—இந்தப்
பாரி லறமழை பெய்குவான்—நெஞ்சின்
ஆவ லறிந்தருள் கூட்டுவான்—நித்தம்
ஆண்மையும் வீரமு மூட்டுவான்.

4. தீ வளர்த்தே பழ வேதியர்—நின்றன்
சேவகத் தின்புகழ் காட்டினர்—ஒளி
மீவளருஞ் செம்பொ னாட்டினர்—நின்றன்
மேன்மையி னாலற நாட்டினர்—ஐய
நீ வளருங் குரு வெற்பிலே—வந்து
நின்றுநின் சேவகம் பாடுவோம்—வரம்
ஈவள் பராசக்தி யன்னைதான்—உங்கள்
இன்னருளே யென்று நாடுவோம்—நின்றன்.

5. ஸூர்ய தர்சனம்.

(காலை வேளையில், கடற் கரையில், சூரியன் மேகங்களால் மூடப்பட்டிருக்க, அவனை முகம் காட்டும்படி வேண்டிப் பாடிய பாடல்கள்.)

ராகம்—பூபாளம்.

1. சுருதி யின்கண் முனிவரும் பின்னே
தூமொ ழிப்புல வோர்பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமை யென் றேத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்
பரிதி யேபொருள் யாவிற்கு முதலே
பானுவே பொன் செய் பேரொளித் திரளே
கருதி நின்னை வணங்கிட வந்தேன்
கதிர்கொள் வாண்முகம் காட்டுதி சற்றே.

2. வேதம் பாடிய சோதியைக் கண்டு
வேள்விப் பாடல்கள் பாடுதற் குற்றேன்
நாத வார்கட லின்னொலியோடு
நற்ற மிழ்ச்சொ லிசையையுஞ் சேர்ப்பேன்
காத மாயிர மோர்கணத் துள்ளே
கடுகியோடும் கதிரினம் பாடி
ஆத வானினை வாழ்த்திட வந்தேன்
அணிகொள் வாண்முகம் காட்டுதி சற்றே.

6. வேண்டும்.

மனதி லுறுதி வேண்டும்.
வாக்கினிலே யினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்படவேண்டும்
கனவு மெய்ப் படவேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமு மின்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
காரியத்தி லுறுதி வேண்டும்
பெண்விடுதலை வேண்டும்
பெரியகடவுள் காக்கவேண்டும்
மண் பயனுற வேண்டும்
வானகமிங்கு தென்படவேண்டும்
உண்மை நின்றிட வேண்டும்.
ஓம் ஓம் ஓம் ஓம்.

7. காணி நிலம்.

1. காணி நிலம் வேண்டும்—பராசக்தி
காணி நிலம் வேண்டும்—அங்கு
தூணி லழகியதாய்—நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய்—அந்தக்
காணி நிலத்திடையே—ஓர் மாளிகை
கட்டித் தரவேண்டும்—அங்கு
கேணியருகினிலே—தென்னைமரம்
கீற்று மிள நீரும்

2. பத்துப் பனிரண்டு—தென்னைமரம்
பக்கத்திலே வேணும்—நல்ல
முத்துச் சுடர் போலே—நிலாவொளி
முன்பு வர வேணும்—அங்கு
கத்துங் குயிலோசை—சற்றே வந்து
காதிற்பட வேணும்—என்றன்
சித்த மகிழ்ந்திடவே—நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

3. பாட்டுக் கலந்திடவே—அங்கே யொரு
பத்தினிப் பெண் வேணும்—எங்கள்
கூட்டுக் களியினிலே—கவிதைகள்
கொண்டுதர வேணும்—அந்தக்
காட்டு வெளியினிலே—அம்மா நின்றன்
காவலுற வேணும்—என்றன்
பாட்டுத் திறத்தாலே—இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.

---

8. அச்சமில்லை.

(பண்டாரப் பாட்டு)

1. அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
துச்சமாக வெண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கை
பெற்றுவிட்ட போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
இச்சை கொண்ட பொருளெலாம்
இழந்து விட்ட போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

2. கச்சணிந்த கொங்கை மாதர்
கண்கள் வீசு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
நச்சை வாயி லேகொணர்ந்து
நண்ப ரூட்டு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
பச்சையூ னியைந்த வேற்
படைகள் வந்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.
உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

———

208
2-61

9. சொல்

(சொல் ஒன்று வேண்டும். தேவ சக்திகளை நிலைபெறச் செய்யும் சொல் வேண்டும்.)

1. தேவர் வருகவென்று சொல்வதோ?—ஒரு
செம்மைத் தமிழ் மொழியை நாட்டினால்
ஆவலறிந்து வருவீர் கொலோ—உம்மை
யன்றி யொரு புகலு மில்லையே.

2. "ஓம்" என்றுரைத்து விடிற்போதுமோ!-அதில்
உண்மைப் பொரு ளறிய லாகுமோ?
தீமையனைத்து மிறந்தேகுமோ?—என்றன்
சித்தந் தெளிவுநிலை கூடுமோ?

3. "உண்மை யொளிர்க" வென்று பாடவோ?—
உங்களருள் பொருந்தக் கூடுமோ? [அதில்
வண்மை யுடையதொரு சொல்லினால்—உங்கள்
வாழ்வு பெற விரும்பி நிற்கிறோம்.

4. "தீயை யகத்தினிடை மூட்டுவோம்"—என்று
செப்பு மொழி வலிய தாகுமோ?
ஈயைக் கருடநிலை யேற்றுவீர்—எம்மை
என்றுந் துயர மின்றி வாழ்த்துவீர்.

5. வான மழை பொழிதல் போலவே—நித்தம்
வந்து பொழியு மின்பங் கூட்டுவீர்.
கானை யழித்து மனை கட்டுவீர்—துன்பக்
கட்டுச் சிதறிவிழ வெட்டுவீர்.

6. விரியு மறிவு நிலை காட்டுவீர்—அங்கு
வீழுஞ் சிறுமைகளை யோட்டுவீர்—அங்கு
தெரியு மொளிவிழியை நாட்டுவீர்—நல்ல
தீரப் பெருந் தொழிலிற் பூட்டுவீர்.

7. மின்ன லனைய திற லோங்குமே—உயிர்
வெள்ளங் கரையடங்கிப் பாயுமே
தின்னும் பொரு ளமுத மாகுமே—இங்கு
செய்கை யதனில் வெற்றி யேறுமே.

8. தெய்வக் கனல் விளைந்து காக்குமே—நம்மைச்
சேரு மிரு ளழியத் தாக்குமே.
கை வைத்தது பசும்பொன் னாகுமே—பின்பு
காலன் பய மொழிந்து போகுமே.

O-:1MSU
N35

9. "வலிமை, வலிமை" யென்று பாடுவோம்-என்
வாழுஞ் சுடர்க் குலத்தை நாடுவோம்— [றும்
கலியைப்பிளந்திடக் கை யோங்கினோம்—நெஞ்
கவலை யிருளனைத்து நீங்கினோம் [சிற்

10. அமிழ்தம் அமிழ்தம் என்று கூவுவோம்—நித்தம்
அனலைப் பணிந்து மலர் தூவுவோம்—
தமிழிற் பழமறையைப் பாடுவோம்—என்றுந்
தலைமை பெருமை புகழ் கூடுவோம்.

59640

29. கடவுள் எங்கே இருக்கிறார்?

"சொல்லடா ஹரி யென்ற கடவுளெங்கே?
சொல்" லென்று ஹிரணியன்தா னுறுமிக் கேட்க
நல்ல தொரு மகன் சொல்வான் :—" தூணிலுள்
நாராயணன், துரும்பிலுள்ளான்" என்றான். [வான்
வல்ல பெருங் கடவுளிலா அணுவொன்றில்லை
மஹா சக்தி யில்லாத வஸ்துவில்லை
அல்லலில்லை, அல்லலில்லை, அல்லலில்லை,
அனைத்துமே தெய்வ மென்றா லல்லலுண்டோ? (1)

கேளப்பா சீடனே, கழுதை யொன்றைக்
"கீழான" பன்றியினைத் தேளைக்கண்டு
தாளைப் பார்த்திருகரமுஞ் சிரமேற் கூப்பிச்
சங்கர சங்கர வென்று பணிதல் வேண்டும்;
கூளத்தை மலத்தினையும் வணங்கல் வேண்டும்;
கூடிநின்ற பொருளனைத்தின் கூட்டந் தெய்வம்.
மீளத்தா னிதைத் தெளிவா விரித்துச் சொல்வேன்
விண்மட்டுங் கடவுளன்று, மண்ணு மஃதே. (2)

சுத்த வறிவே சிவ மென் றுரைத்தார் மேலோர்,
சுத்த மண்ணும் சிவமென்றே யுரைக்கும்வேதம்,
வித்தகனுங் குரு சிவமென்றுரைத்தார் மேலோர்,
வித்தை யிலாப் புலையனு மஃதென்னும் வேதம்.
பித்தரே, அனைத்துயிருங் கடவுளென்று
பேசுவது மெய்யானாற் பெண்டிரென்று
நித்தநும தருகினிலே குழந்தை யென்றும்
நிற்பனவுந் தெய்வமன்றோ, நிகழ்த்து வீரே. (3)

உயிர்களெலாந் தெய்வ மன்றிப் பிறவொன்றில்லை
ஊர்வனவும் பறப்பனவு நேரே தெய்வம்!
பயிலு முயிர் வகை மட்டுமன்றி யிங்கு
பார்க்கின்ற பொருளெல்லாந் தெய்வங்கண்டீர்,
வெயிலளிக்கு மிரவி மதி விண்மீன் மேக
மேலுமிங்கு பல பலவாந் தோற்றங் கொண்டே
இயலுகின்றன ஜடப்பொருள்களனைத்துந்தெய்வம்
எழுதுகோல் தெய்வ மிந்த எழுத்துந் தெய்வம். (4)

பாரதி நூல்கள்.

நேர்த்தியான காலிகோ பைண்டு.

(Library Edition)

கவிதைகள்.

தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு, புதிய ஆத்தி சூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு, காட்சி, குயில், பாஞ்சாலி சபதம் முதலியன சேர்ந்தது. ரு. 2-8-0

வசனங்கள்.

இதில் ஞானரதம், சந்திரிகையின் கதை, நவ தந்திரம், பதஞ்சலி யோகஸூத்ரம், வேத ரிஷி களின் கவிதை, தராசு முதலியன அடங்கி யுள்ளன. ரு. 2-0 0

பகவத்கீதை.

நாகர அக்ஷரத்தில் மூலமும், பாரதியாரின் அழ கிய தமிழ் உரையும், விரிவான நூன்முகமும் அடங்கியது. நல்ல காலிகோ பைண்டு செய்தது.

	அணா	0-12-0
ராப்பர் பைண்டு செய்தது.	அணா	0-8-0
பாகெட் கீதை (காலிகோ)		0-7-0
ஷை (ராப்பர்)		0-5-0

பாரதி நூல்கள்.

தனிப்பகுதிகள்.

		ரூ.	அ.	பை.
1.	தேசிய கீதங்கள்	0	5	0
2.	தோத்திரப் பாடல்கள்	0	5	0
3.	வேதாந்தப் பாடல்கள்	0	4	0
4.	விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு	0	4	0
5.	புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு	0	2	6
6.	காட்சி	0	3	0
7.	குயில்	0	2	6
8.	பாஞ்சாலி சபதம்	0	8	0
9.	பகவத் கீதை	0	8	0
10.	ஞானரதம்	0	4	0
11.	சித்தக் கடல், Stray Thoughts, ஜகத் சித்ரம், விடுதலை	0	2	0

12.	பதஞ்சலி யோகஸூத்ரம், வேத ரிஷிகளின் கவிதை, கீதை முன்னுரை	0 6 0
13.	சந்திரிகையின் கதை (Approved)	* 0 8 0
14.	நவதந்திரக் கதை	* 0 6 0
15.	தராசு	0 4 0
16.	கதைக்கொத்து	0 8 0

பாரதியாரின் சொந்த அநுபவங்கள், அபிப்பிராயங்கள், கனவுகள் இவை எளிய நடையிலும் புதிய முறையிலும் எழுதப்பட்டுள்ளன.

நமது சமூக வாழ்க்கையின் குறைகளை ஒழிக்க இது ஓர் வழிகாட்டி.

கட்டுரைத் தொகுதிகள் :—

(1) தத்துவம். (அச்சில்)

(2) மாதர். (அச்சில்)

(3) கலைகள். (அச்சில்)

(4) சமூகம். (அச்சில்)

பாரதியாரும் அவர் நூல்களும்.

(BHARATI & HIS WORKS)

ஸ்ரீ. ஸி. விசுவநாதன், பி.எ., எல்.டி. யால் எழுதப்பட்டது.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அரிய நூல்

இதில் பாரதியாரின் சரித்திரச் சுருக்கமும், ஒவ்வொரு நூலைப்பற்றிய மதிப்புரையும், புலவர் கூட்டத்தில் பாரதியார் வகிக்கும் ஸ்தானமும், அவர் கவிதை, தேசத்தொண்டு, வேதாந்தம் முதலிய வற்றைப்பற்றிய விமர்சமும் அடங்கியுள்ளன.

பாரதியாரின் சகோதரரால் இந்நூல் எழுதப்பட்டுள்ளதால் மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடாத பாரதியாரின் விசேஷ அநுபவங்களை இதில் காணலாம்.

பாப்பாப் பாட்டு	0	0	3
புதிய ஆத்திசூடி	0	0	6
முரசு	0	0	6

இவை சிறிய குழந்தைகளுக்கு மட்டுமே யன்றிப் பெரியார்களுக்கும் பாரதியார் கொடுக்கும் அரிய உபதேசங்கள் அடங்கியவை.

(தபாற்செலவு வேறு.)

கிடைக்குமிடம்:—

பாரதி, பிரசுராலயம்,
567, ஹை ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

"மாசி"
தபாற் பெட்டி 14,
கோலாலம்பூர்.

PRINTED AT
THE HINDI PRACHAR PRESS,
TRIPLICANE, MADRAS.